Ontario Energy Board
Commission de l'énergie de l'Ontario

TAKE CHARGE

# பாவனை நேரத்துக்குரிய மின்சக்தி விலைகள்

ஒன்ராறியோவில் உள்ள வீட்டுவாசிகளும் சிறிய வணிகநிறுவனத்தினரும் மின்சக்திப் பாவனை நேரத்துக்கு உரிய விலைகளைச் செலுத்துகின்றனர். பாவனை நேரத்துக்குரிய விலைகள் நேரத்துக்கு ஏற்பவும் நாளுக்கு ஏற்பவும் மாறுபடுகின்றன. பருவத்துடன் உச்சப் பாவனைக் காலநேரங்களும் மாறுகின்றன.

## இது எவ்வாறு வேலை செய்கிறது

#### இது உங்களுடைய SMART METER உடன் ஆரம்பமாகிறது

பாவனை நேரத்துக்குரிய விலைகள் SMART METER உடன் ஆரம்பமாகிறது, எவ்வளவு மின்சக்தியை, எப்போது பாவிக்கிறீர்கள் என்பதை உங்களுடைய பயன்பாட்டு நிறுவனத்துக்கு இது சரியாகச் சொல்கிறது.

குறித்த நேரத்தில், நீங்கள் பாவிக்கும் மின்சக்தியின் சரியான அளவுக்கான கட்டணத்தை உங்களிடம் அறவிடுவதற்கு அந்தத் தகவலை பயன்பாட்டு நிறுவனம் பயன்படுத்துகிறது. உங்களுடைய மின்சக்திப் பாவனை இந்த மூன்று பிரிவுகளுக்குள் ஒன்றுக்குள் அடங்கும்.

உச்சமற்ற பாவனை நேரம் (OFF-PEAK)……………………………………$

மாலை நேரங்கள், வார இறுதிநாட்கள் மற்றும் விடுமுறை நாட்கள்

இடைப்பட்ட நேரம் (MID-PEAK)…………………………………..$$

பகல் நேரம், ஆனால் நாளின் அதிகபட்சமான பாவனையற்ற நேரம்

**உச்சப் பாவனை நேரம் (ON-PEAK)…………………………………..$$$**

நாளின் அதிகபட்சத் தேவையுள்ள நேரம்

**வேறுபட்ட விலைகளுக்கான காரணங்கள்**

தேவை குறைவாக இருக்கும் போது: மின்சக்தியைக் குறைந்தளவான மக்கள் பாவிக்கிறார்கள், நுகர்வோர் குறைவான கட்டணம் செலுத்துகிறார்கள். இது ஏனெனில், அணு மற்றும் பாரிய நீர்மின்சாரம் போன்ற குறைந்த செலவுள்ள மூலங்களிலிருந்து அதிகளவில் உங்களுக்கு மின்சக்தி கிடைக்கின்றது.

தேவை அதிகரிக்கும் போது: வேலைநாள் தொடங்கும் போது, அனேகமான மக்களும் வர்த்தகங்களும் தங்களுடைய விளக்குகள், உபகரணங்கள் மற்றும் கருவிகளை இயக்குகிறார்கள். மாகாணத்துக்குரிய மலிவான மின்சக்தி முற்றாகப் பயன்படுத்தப்பட்ட பின்னர் அதிக விலையான மூலங்களுக்கு அது திசை திரும்புகிறது.

**இரண்டு உச்சப்பாவனைப் பருவங்கள்**


கோடைகாலத்தில், குளிரூட்டிகள் அதிகமாக இயங்கும் போது, மிக வெப்பமாக இருக்கும் பிற்பகலில் மின்சக்திப் பாவனை உச்சத்தில் இருக்கும்.

பனிக்காலத்தில், குறைவாக பகல் வெளிச்சம் என்பதன் பொருள் மின்சக்திப் பாவனை இரண்டு தடவைகள் உச்சத்தை அடையும்: ஒரு முறை காலையில் மக்கள் எழும்பி தங்களின் விளக்குகளையும் உபகரணங்களையும் இயக்கும் போது, பின்னர் வேலையிலிருந்து மக்கள் வீட்டுக்கு வரும் போது.

**சில்லறை விற்பனையாளரின் ஒப்பந்தம் ஒன்று உள்ளதா?**

மின்சக்தி சில்லறை விற்பனையாளர் ஒருவருடன் ஒப்பந்தம் ஒன்றில் நீங்கள் கையொப்பமிட்டிருந்தால், நீங்கள் ஒப்புக்கொண்ட ஒப்பந்த விலைகளைச்

செலுத்துவீர்கள் (OEB ஆல் தீர்மானிக்கப்பட்ட பாவனை நேரத்துக்கான அல்லது வேறுபட்ட தரங்களில் உள்ள விலைகள் அல்ல). அத்துடன் உங்களுடைய கட்டணச் சீட்டு வித்தியாசமானதாக இருக்கும் — சில்லறை ஒப்பந்தங்கள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு OEB இணையத்தளத்தைப் பார்வையிடவும்.




## மின்சக்திப் பாவனையை நிர்வகிக்க நீங்கள் என்ன செய்யலாம்

மின்சக்தியைப் பாதுகாக்க முயற்சியுங்கள் அத்துடன் கொஞ்சப் பாவனையை வாரஇறுதிநாட்களுக்கும் வாரநாட்களின் உச்சப்பாவனையற்ற நேரங்களுக்கும் மாற்றுங்கள் …

நிரல்படுத்தக்கூடிய வெப்பநிலைப்பி ஒன்றைப் (PROGRAMMABLE THERMOSTAT) பொருத்துங்கள். நீங்கள் வீட்டில் இல்லாத போதும் தூங்கும் போதும் சக்திப் பாவனையைக் குறைப்பதற்கு அதைத் தயார்படுத்துங்கள்

ஒரு மாதிரி வீட்டின். அண்ணளவான 60% சக்திச் செலவு வெப்பமாக்குவதிலும் குளிரூட்டுவதிலும் செலவாகின்றது.

வழமையான விளக்குகளுக்குப் பதிலாக LED பருவகால விளக்குகளைப் பாவியுங்கள்.

| |
|---|
| பனிக்காலத்தில் வெப்பத்தை வெளிவிடும் அல்லது கோடைகாலத்தில் சூடான காற்றை உள்ளுக்குக் கொண்டுவரும் துவாரங்களையும் கசிவுகளையும் மூடுங்கள். கோடைகாலத்தில், நடுப்பகல் சூரிய வெளிச்சம் வராமல் தடுக்க மறைப்புகளையும் திரைச்சீலைகளையும் மூடியபடி வைத்திருங்கள். |
| உங்களுடைய அழுக்குத் துணிகளை குளிர்நீரில் கழுவுங்கள். |
| குளிரூட்டியைப் பாவித்தால் அதை 26 C ல் அல்லது அதற்கு மேல் இருக்க வையுங்கள். உங்களுடைய வெப்பநிலைப்பியை 1 C ஆல் அதிகரித்தல் உங்களுடைய மின்சக்திக் கட்டணத்தை 5%வரை குறைக்கும். இதைவிடச் சிறப்பு, பதிலாகக் காற்றாடிகளைப் பாவியுங்கள். |
| செருகியை இழுக்காவிடில் அனேகமான மின்னணுவியல் பொருட்கள் முழுமையாக அணைந்த நிலைக்கு வரமாட்டாது. ஒவ்வொன்றும் 4 க்கும்10 க்கும் இடைப்பட்ட watts "phantom power" ஐப் பாவிக்கக் கூடியவையாக இருப்பதால் அவற்றை அணைக்கக் கூடிய power bar ஒன்றில் செருகுங்கள். |
| ENERGY STAR® உபகரணங்கள் போன்ற சக்தியை வினைத்திறனாகப் பாவிக்கக் கூடிய பொருள்களைத் தெரிவுசெய்யுங்கள். |

மேலும் அறிந்து கொள்ளுங்கள்:

- 10 Smart Meter Lane: www.ieso.ca/house
- saveONenergy: www.saveonenergy.ca
- Ministry of Energy: www.ontario.ca/energy

தகவலறிந்த சக்தி நுகர்வோராக இருப்பதற்கு, ஒன்ராறியோ சக்தி சபை உங்களுக்கு உதவலாம்

பல்வேறு விடயங்கள் பற்றிய தகவல்களுக்குப் பார்வையிடுங்கள்:
www.ontarioenergyboard.ca/OEB/Consumers

எங்களுடைய நுகர்வோர் தொடர்புகள் மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள் (திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:30 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.)

1-877-632-2727 (ஒன்ராறியோவுக்குள் கட்டணமற்றது)
416-314-2455 (ரொறன்ரோ பெரும்பாகத்துக்குள் அல்லது கனடாவுக்கு வெளியே)
consumerrelations@ontarioenergyboard.ca

எங்களைப் பின்தொடருங்கள்: @OntEnergyBoard

ஒன்ராறியோ சக்திச் சபை என்பது சுயாதீனமான, பாரபட்சமற்ற ஒரு பொது நிறுவனம் ஆகும். பொதுமக்களின் நலனுக்காக நாங்கள் முடிவெடுக்கின்றோம். ஒரு நியாயமான செலவில், நம்பகமான சக்திச் சேவைகளை உங்களுக்கு வழங்கும், பணரீதியாக சாத்தியமான வினைத்திறனான சக்தித் துறையை ஊக்குவிப்பது எங்களுடைய நோக்கம் ஆகும்.

*வேறு மொழிகளிலும் இத் தகவல் கிடைக்கின்றது. எங்களுடைய இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது எங்களுடைய நுகர்வோர் தொடர்புகள் மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.*